பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 09 2026        TUESDAY  6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மும்பையில் உலகளாவிய நிதித் தொழில்நுட்ப மாநாட்டை மும்பையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. கிராமப்புறங்களிலும் சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு இடைவெளி 45 நாட்களில் இருந்து 25 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத் துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் தொழிற்சாலைகளுக்கு வெளிப்படைத் தன்மையுடன் சுற்றுச் சூழல் அனுமதி வழங்கப்படுவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் டாக்டர் ராஜீவ் தெரிவித்துள்ளார்

4. மேகமலை - வருஷநாடு பகுதியில் மக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பிஜேபி ஆதரவளிக்கும் என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

5. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, மும்பையில் உலகளாவிய நிதித் தொழில்நுட்ப மாநாட்டை மும்பையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

உலகின் மிகப்பெரிய வருடாந்திர நிதிக்தொழில்நுட்ப மாநாடுகளில் ஒன்றான இது வரும் 11-ம் தேதி வரை நடைபெறுகிறது.

2020ஆம் ஆண்டு முதல் இந்த மாநாட்டில், கொள்கை வகுப்பாளர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், மத்திய வங்கிகள், நிதி நிறுவனங்கள், நிதிக்தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று நிதித் தொழில்நுட்பங்கள் குறித்து விவாதிக்கின்றனர்.

நவீன தொழில்நுட்பங்கள், அனைவரையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகள் என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு இம்மாநாடு நடைபெறுகிறது.

நிதித் துறையில் செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

கிராமப்புறங்களிலும் சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான காலஇடைவெளி 45 நாட்களில் இருந்து 25 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத் துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தற்போது சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோக நிலைமை மேம்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். நிலுவையில் உள்ள சிலிண்டர் முன்பதிவுகளின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இந்தக் கட்டுப்பாட்டை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இனி நகர்ப்புறம், கிராமப்புறம் என்ற வேறுபாடின்றி அனைத்து வீட்டு உபயோக எல்பிஜி நுகர்வோரும் 25 நாட்களுக்கு ஒருமுறை சிலிண்டர் முன்பதிவு செய்து கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மேற்காசிய சூழல் காரணமாக சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டதையடுத்து, நகர்ப்புறங்களில் 25 நாட்களுக்கு ஒருமுறையும், கிராமப்புறங்களில் 45 நாட்களுக்கு ஒருமுறையும் முன்பதிவு செய்யும் நடைமுறை கொண்டுவரப்பட்டது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் தொழிற்சாலைகளுக்கு வெளிப்படைத் தன்மையுடன் சுற்றுச் சூழல் அனுமதி வழங்கப்படுவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் டாக்டர் ராஜீவ் கூறியுள்ளார்.

தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு சட்டப்பேரவையில் பதிலளித்துப் பேசிய அவர், கடந்த மூன்று மாதங்களில் எந்த முறைகேடும் இன்றி, 335 புதிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 760 தொழிற்சாலைகளுக்கு புதுப்பித்தல் சான்று வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழகத்தில் சுற்றுச் சூழல் துறையின் பயன்பாட்டிற்கு, இனி மின்சார வாகனங்கள் மட்டுமே வாங்கப்படும் என்று டாக்டர் ராஜீவ் கூறினார்.

>>>>>><<<<<<

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பி.எட்., பட்டப்படிப்பு இரண்டாம் கட்ட மாணவர் சேர்க்கைக்கு இணையதளம் மூலம், வரும் 15ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு அரசு கல்லூரிகள் மற்றும் 10 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மொத்தம் 578 காலியிடங்கள் உள்ளதாக கூறியுள்ளார்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் www.tngasa.in என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மேகமலை – வருஷநாடு பகுதியில் மக்களை பாதுகாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பிஜேபி ஆதரவளிக்கும் என்று அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வருஷநாடு பகுதியில் நடைபெற்ற மக்கள் சபைக் கூட்டத்தில் நேற்று அவர் கலந்து கொண்டு கிராம மக்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

2006-ம் ஆண்டு வனஉரிமைச் சட்டத்தை அப்போதைய காங்கிரஸ் அரசு கொண்டு வந்த தாக அவர் தெரிவித்தார். 2009-ம் ஆண்டில் இப்பகுதியை சரணாலயமாக அறிவிக்கும் முன்பு, அப்போது ஆட்சியில் இருந்த மத்திய மாநில

அரசுகள் இது தொடர்பான உண்மை நிலையை தெரிவித்திருந்தால் இந்த பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்று அவர் கூறினார்.

அதிகாரமளிக்கப்பட்ட குழுவால் ஆக்கிரமிப்பாளர்கள் என அடையாளம் காணப்பட்ட 118 அரசு ஊழியர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவும், அதே சமயம், பல தலைமுறைகளாக மேகமலையில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்களை அப்புறப்படுத்துவதில் பிஜேபி-க்கு உடன்பாடு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக இப்பகுதி மக்களுடன் சென்று மத்திய வனத்துறை அமைச்சரை சந்தித்து தீர்வு காண முயற்சி செய்யப்படும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சட்டமன்ற ஜனநாயக மாண்புகளை காக்கும் பொறுப்பு ஆளும் கட்சிக்கு கூடுதலாக உள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேரவையில் எதிர்க்கட்சிகளின் குரலுக்கு செவிசாய்த்து, உரிய முறையில் பதில் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்களை இழிவுபடுத்தும் விதத்தில் யார் பேசினாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என்றும் திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நாகை மாவட்டம், வேளாங்கண்ணி பேராலய திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேர் பவனி நேற்றிரவு வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில், தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து ஏராளமானோர் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்-செல்வன் ஜெபராஜ் 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் உட்பகுதிகளில் சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்து காணப்படும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சென்னையின் பல்வேறு பகுதிகளில் நள்ளிரவு பரவலாக கனமழை பெய்தது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

எகிப்தில் இன்று தொடங்கும் சர்வதேச விமான சாகச நிகழ்வில் இந்திய விமானப்படையின் சாரங் ஹெலிகாப்டர் சாகச குழு பங்கேற்கிறது.

>>>>>><<<<<<

இந்தியா - பங்களாதேஷ் இடையே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரயில் சேவையை மீண்டும் தொடங்குவது குறித்து இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையேயான ஆலோசனைக் கூட்டம், டாக்காவில் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மணிப்பூர் மற்றும் அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் உரையாடல் குறித்த வினாடி வினா போட்டியில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று அம்மாவட்ட மைபாரத் அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டம், கொன்னையார் பகுதியில் இன்று மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு. மதுபாலன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

ஈரோடு மாவட்டம், ஆசனூர் அருகேயுள்ள நெடுஞ்சாலைப் பகுதியில் யானை உள்ளிட்ட காட்டு விலங்குகள் நடமாட்டம் இருப்பதால், வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் பயணிக்குமாறு வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

திருச்சி மாவட்டம், பிராட்டியூர் அருகே வாய்க்காலில் காணப்பட்ட 8 அடி நீள முதலையை தீயணைப்புத்துறையிர் மீட்டு, வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

>>>>>><<<<<<

சென்னை அடையாறு மண்டலம், 178வது வார்டு பகுதியில் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் குடிநீர் வசதி தொடர்பாக, மாநில அமைச்சர் திரு. குமார் பொதுமக்களிடம் குறைகளை நேற்று கேட்டறிந்தார்.

>>>>>><<<<<<

திருப்பதி, திருக்குடை ஊர்வலத்தை ஒட்டி, சென்னையில் நாளை பல்வேறு இடங்களில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பெருநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் Tharun Mannepalli, Rounak Chouhan, Ashmita Chaliha, Malvika Bansod உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஜூனியர் பிரிவில் இந்தியாவின் Maya Rajeshwaran - யுக்ரைனின் Antonina Sushkova இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 1-6, 6-4, 10-1 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Emery Combs- Olivia Reyes இணையை வென்றது.

>>>>>>END<<<<<<